DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous CASE No: C.C.No. 244/13

Preliminary Register

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 1 |
| Name | : | Arivu |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.18

முதல் விசாரணை:

நான் நடுமுதலைக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சாட்சி சந்திரனைத் தெரியும். கடந்த 2013ம் ஆண்டு இரவு 7.00 மணி அளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு திரும்ப அரசு பேருந்து ஒன்றில் உசிலம்பட்டி டு மதுரை ரோட்டில் சென்று கொண்டிருந்தேன். அரசு பேருந்து மேற்கில் இருந்து கிழக்காக சென்று கொண்டிருந்தபோது நான் பேருந்தின் பின்இருக்கையில் அமர்ந்து பயணித்துக் கொண்டிருந்தபோது பொட்டுலுப்பட்டி டீக்கடை அருகே சென்றபோது டம் என்று சத்தம் கேட்டது. அதில் எனக்கு தலையில் முன்பக்கத்தில் அடிபட்டு ரத்தக் காயம் ஏற்பட்டது. என்னுடன் பேருந்தில் பயணம் செய்த வேறு நபர்களுக்கும் அடிபட்டது. பெண்

ஒருவருக்கு முழங்காலில் அடிபட்டது. என் வயதை ஒத்த ஒரு நபருக்கு கால்மொலியில் ஊமைக்காயம் ஏற்பட்டது. பேருந்தின் முன்னே டிராக்டர் சென்று கொண்டிருந்தபோதுதான் டம் என்று சத்தம் கேட்டது. சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்து அதில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு என்னுடன் சேர்த்து காயம்பட்ட 5, 6 நபர்கள் சிகிச்சைக்காக சென்றோம். மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அதசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் டிராக்டர் மோதியதை பார்த்தேன். நான் பின்னால் உட்கார்ந்திருந்ததால் மோதியதை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். டம் என்று சத்தம் கேட்டவுடன் காயத்தில் மயங்கி விட்டேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் வந்துதான் மயக்கம் தெளிந்தேன் என்றால் நான் வரும் வழியில் சற்றுதான் மயக்கமாக இருந்தேன். நான் தற்போது நீதிமன்றத்தில் கூறியதுபோன்றுதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அதற்கு பின்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

ம.வி.இல்லை.

/Sd./ Arivu

Taken down by me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd./ M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous CASE No: C.C.No. 244/13

Preliminary Register

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 2 |
| Name | : | Balasubramanian |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.18

முதல் விசாரணை:

நான் பொட்டுலுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2013ம் வருடம் இரவு 7.00 மணி அளவில் நான் நடத்தி வரும் பொட்டுலுப்பட்டி மாஸ்டர் டீக்கடையில் நான் இருந்தபோது அரசு பேருந்து ஒன்று மதுரை ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக வந்த அரசு பேருந்து வலதுபக்கம் கிழக்கிருந்து மேற்காக விறகு ஏற்றி நின்று கொண்டிருந்த டிராக்டர் எடைபோடுவதற்காக அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தபோது அரசு

பேருந்தின் ஓட்டுனர் நின்றுகொண்டிருந்த டிராக்டர் மீது வேகமாக வந்து மோதிவிட்டது. அதில் பேருந்து நிலை தடுமாறி என் கடைக்கு கிழக்கேயுள்ள பள்ளத்தில்ரோட்டை விட்டு கீழே இறங்கி பள்ளத்தில் கவிழ்ந்து விட்டது. நான் போய் பார்த்தபோது பேருந்தில் பயணம் செய்த 10, 15 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. ஒருவர் அடிபட்டு கண்ணாடி முன்னால் கிடந்தார். அவர் தனக்கு ஊர் மதுரை என்று சொன்னார். அவர் கீழே விழுந்த வேகத்தில் கல்லில் அடிபட்டு நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டது. அத்துடன் அவர் மயங்கி விட்டார். என்னுடன் கடைக்கு பக்கத்தில் கடை வைத்திருக்கும் சாட்சி ரீகனும் என்னுடன் இருந்தார். நாங்கள் ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி வரவழைத்து காயம்பட்ட நபர்களை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். ஓட்டுனரை நான் கவனிக்கவில்லை. போலிசார் சம்பவ இடத்துக்கு வந்து என்னை விசாரித்தார்.

கு.வி.

என் கடை தனியாக இருப்பதால் ஒத்தக்கடை என்று அழைக்கப்படுகிறது என்றால் சரிதான். அது சாலையில் இருந்து 15 அடி தள்ளி அமைந்துள்ளது. சம்பவம் இருட்டான நேரத்தில் நடந்துள்ளது. நான் டீக்கடை வைத்துள்ளேன். என் கடைக்கு தெற்குநோக்கி வாசல் உள்ளது. என் கடையில் இருந்து கிழக்குப்புறம் 60 அடி தள்ளி சம்பவம் நடந்தது. டம் என்ற சத்தம் கேட்டபின்புதான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அதனால் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்துக்கு அருகே எடைநிலையம் ரோட்டுக்கு தென்புறம் அமைந்துள்ளது. போலிசார் விசாரணையில் தற்போது கூறியதுபோல்தான் கூறினேன். அரசு பேருந்தின் பதிவு எண், ஓட்டுனர் பெயர் தெரியாது. காயம்பட்டவர்களின் விபரமும் தெரியாது. சம்பவம் நடந்து ஒரு மணி நேரத்திற்குள் போலிசார் விசாரித்தார்கள். சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் டீக்கடைக்கு போலிசார் அடிக்கடி வருவதால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

/Sd./ Balasubramanian

Taken down by me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd./ M. Udhayavelavan,

District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.